செய்தி வெளியீடு எண் : 1200 நாள் : 19.06.2023

**வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழ்நாட்டில் நேற்று (18.06.2023) முதல் பரவலாக மழை பெய்து வரும் நிலையில், மழைக்காலங்களில் பேரிடர்களை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள ஆயத்த பணிகள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் இன்று (19.06.2023) மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு**

1. **மழை விபரம்**

தென்மேற்கு பருவமழைக் காலத்தில், 01–06–2023 முதல் 19–06–2023 முடிய 25.9 மி.மீ. மழை பெய்துள்ளது. இது இயல்பான மழை அளவைக் காட்டிலும் 22 விழுக்காடு குறைவு ஆகும்.

கடந்த **24** மணி நேரத்தில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக27 மாவட்டங்களில் மழைப்பொழிவு ஏற்பட்டுள்ள நிலையில் மாநில சராசரி 11.10 மி.மீ. ஆகும்.

சென்னை மாநகராட்சியில் கடந்த 24 மணி நேரத்தில் (18.06.2023 8.30. முற்பகல் – 19.06.2023 8.30 முற்பகல்) 4213.50 மி.மீ மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் சராசரியாக 78,028 மி.மீ. ஆகும்.

2. **மிக கனமழைப்பொழிவு ஏற்பட்டுள்ள மாவட்டங்கள்**

| வ. எண். | மாவட்டம் | பதிவான மழை அளவு (மி.மீ.) | சராசரி மழை அளவு (மி.மீ.) |
|---|---|---|---|
| 1 | சென்னை | 4213,50 | 78.03 |
| 2 | காஞ்சிபுரம் | 426.30 | 60.90 |
| 3 | செங்கல்பட்டு | 385.20 | 42,80 |
| 4 | திருவள்ளூர் | 304,60 | 17,92 |
| 5 | விழுப்புரம் | 369,80 | 17,61 |
| 6 | கடலூர் | 375,70 | 15,03 |

3. **மிக கனமழை விபரம் ( (115.6 முதல் 204.4 மி.மீ வரை)**

| வ. எண். | மாவட்டம் | மழைமானி நிலையம் | பதிவான மழை அளவு (மி.மீ.) |
|---|---|---|---|
| 1 | சென்னை | பெருங்குடி | 165.0 |
| 2 | | அடையாறு | 143.0 |
| 3 | | மீனம்பாக்கம் (ஆலந்தூர்) | 137.6 |
| 4 | | மண்டலம் 13 அடையாறு | 136.5 |
| 5 | | முகலிவாக்கம் | 135.0 |
| 6 | | இராயபுரம் | 133.65 |
| 7 | | அடையாறு மண்டலம் 13 | 124.8 |
| 8 | | பெருங்குடி மண்டலம் 14U41 | 118.2 |

4. கனமழை விபரம் (64.5 முதல் 115.5 மி.மீ. வரை)

| வ. எண். | மாவட்டம் | மழைமானி நிலையம் | பதிவான மழை அளவு (மி.மீ.) |
|---|---|---|---|
| 1 | சென்னை | வளசரவாக்கம் மண்டலம் 11 | 113.4 |
| 2 | காஞ்சிபுரம் | செம்பரம்பாக்கம் | 107.0 |
| 3 | சென்னை | திரு.வி.க. நகர் மண்டலம் 06 | 103.2 |
| 4 | | தேனாம்பேட்டை | 102.6 |
| 5 | | அண்ணாநகர் மண்டலம் 08 | 101.4 |
| 6 | | மதுரவாயல் மண்டலம் 11 | 101.1 |
| 7 | | அண்ணா பல்கலைக்கழகம் | 96.0 |
| 8 | காஞ்சிபுரம் | குன்றத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் | 88.2 |
| 9 | சென்னை | காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம் | 88.0 |
| 10 | | ஐஸ் ஹவுஸ் மண்டலம் 10 | 84.15 |
| 11 | | மலர் காலனி மண்டலம் 8 | 83.7 |
| 12 | திருவள்ளூர் | ஜமீன் கொரட்டூர் | 84.0 |
| 13 | சென்னை | எம்.ஜி.ஆர். நகர் அரசு மேல்நிலைப் பள்ளி | 82.2 |
| 14 | | கோடம்பாக்கம் மண்டலம் 10 | 78.9 |
| 15 | | திருவொற்றியூர் | 77.4 |
| 16 | திருவள்ளூர் | பூவிருந்தவல்லி | 74.0 |
| 17 | சென்னை | சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகம் | 71.1 |
| 18 | | தண்டையார் பேட்டை மண்டலம் 04 | 68.4 |
| 19 | செங்கல்பட்டு | தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகம் | 68.0 |
| 20 | சென்னை | நுங்கம்பாக்கம் | 67.4 |

5. <u>சேத விபரம்</u>

<u>5. அ) மனித உயிரிழப்பு விவரம்: –</u>

| வ. எண் | மாவட்டம் | ஆண் | பெண் | குழந்தை | மொத்தம் | உயிரிழப்பிற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| ஏதுமில்லை | | | | | | |

<u>5. ஆ) காயமடைந்தவர்கள் விவரம்: –</u>

| வ. எண் | மாவட்டம் | ஆண் | பெண் | குழந்தை | மொத்தம் | காயத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருவண்ணாமலை | 0 | 1 | 0 | 1 | இடி தாக்கி |

**5. இ) கால்நடை இழப்பு: –**

| வ. எண். | மாவட்டம் | கால்நடை | செம்மறியாடு / வெள்ளாடு | கோழி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஏதுமில்லை | | | | | |

**5.ஈ) . குடிசை / வீடுகள் சேத விவரம் :–**

| வ. எண் | மாவட்டம் | குடிசைகள் | | வீடுகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பகுதி | முழுமை | பகுதி | முழுமை | பகுதி | முழுமை |
| ஏதுமில்லை | | | | | | | |

**6. நிவாரண முகாம்கள்**

| வ. எண். | மாவட்டம் | நிவாரண முகாம்களின் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை | ஆண்கள் | பெண்கள் | குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஏதுமில்லை | | | | | | | |

**7. வானிலை முன்னெச்சரிக்கை**

19.06.2023 - **கனமழை –** காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில் பல பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும், ஒரு சில பகுதிகளில், இடி மற்றும் மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

**20.06.2023 முதல் 22.06.2023 –** தமிழ்நாட்டில் சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும், ஒரு சில பகுதிகளில், இடி மற்றும் மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:**

19.06.2023:
மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.
வட தமிழக கடலோரப் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

20.06.2023 முதல் 22.06.2023

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

தமிழகத்தில், பரவலாக பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு பகுதிகளில் உள்ள மழை நீரை வெளியேற்றும் பணியை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில், சென்னை மாநகராட்சி உட்பட தொடர்புடைய மாநகராட்சிகளும், மாவட்ட நிருவாகங்களும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றன.

**8. முக்கிய அணைகள் / நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு விபரம் (19-06-2023 நிலவரப்படி)**

| வ. எண் | நீர்த்தேக்கத்தின் பெயர் | கொள்ளளவு (டி.எம்.சி) | தற்போதைய இருப்பு (டி.எம்.சி) | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மேட்டூர் | 93.47 | 63.53 | 68 |
| 2 | பவானிசாகர் | 32.8 | 15.39 | 47 |
| 3 | அமராவதி | 4.05 | 2.02 | 50 |
| 4 | பெரியார் | 10.57 | 2.07 | 20 |
| 5 | வைகை | 6.09 | 2.16 | 35 |
| 6 | பாபநாசம் | 5.5 | 0.49 | 9 |
| 7 | மணிமுத்தாறு | 5.51 | 0.75 | 14 |
| 8 | பேச்சிப்பாறை | 4.35 | 3.03 | 70 |
| 9 | பெருஞ்சாணி | 2.89 | 0.19 | 7 |
| 10 | கிருஷ்ணகிரி | 1.67 | 1.48 | 89 |
| 11 | சாத்தனூர் | 7.32 | 4.41 | 60 |
| 12 | சோலையாறு | 5.046 | 0.53 | 10 |
| 13 | பரம்பிக்குளம் | 13.41 | 1.89 | 14 |
| 14 | ஆழியாறு | 3.86 | 0.57 | 15 |
| 15 | திருமூர்த்தி | 1.74 | 0.49 | 28 |

**9. சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு விபரம் (19-06-2023 நிலவரப்படி)**

| வ. எண் | நீர்த்தேக்கத்தின் பெயர் | கொள்ளளவு (டி.எம்.சி) | தற்போதைய இருப்பு | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பூண்டி | 3.23 | 1.26 | 39 |
| 2 | சோழவரம் | 1.08 | 0.43 | 40 |
| 3 | செங்குன்றம் | 3.3 | 2.18 | 66 |
| 4 | செம்பரம்பாக்கம் | 3.65 | 2.40 | 66 |
| 5 | வீராணம் | 1.46 | 0.12 | 8 |
| 6 | தேர்வாய் கண்டிகை | 0.5 | 0.43 | 85 |

**10. பெருநகர சென்னை மாநகராட்சி**

சென்னை மாநகராட்சியில் கடந்த 24 மணி நேரத்தில் (18.06.2023 8.30. முற்பகல் முதல் 19.06.2023 8.30 முற்பகல் வரை) 4213.50 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதன் சராசரி 78.03 மி.மீ. ஆகும். பல பகுதிகளில் இரவு முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதால் 83 இடங்களில் மழை நீர் தேங்கிய நிலையில் 28 இடங்களில் மழைநீர் அகற்றப்பட்டு விட்டது. மீதமுள்ள இடங்களில் தேங்கியுள்ள மழை நீர் விரைந்து அகற்றப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில், 21 சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேங்கவில்லை. ஒரு சுரங்கப்பாதையில் மழைநீர் வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியில் 22 அதிக திறன் கொண்ட நீர் உறிஞ்சும் இயந்திரங்கள், மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி பகுதிகளில் பலத்த காற்று காரணமாக 6 இடங்களில் மரங்கள் விழுந்த நிலையில் அவை உடனடியாக அகற்றப்பட்டு விட்டன. மாநகராட்சி பகுதிகளில் உள்ள 169 நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கத்திப்பாரா மற்றும் ஆற்காடு சாலையில் மழை நீர் தேங்கியுள்ள நிலையில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 2 குழுக்கள் அங்கு விரைந்துள்ளன.

**11. முன்னெச்சரிக்கை**

கனமழையின் காரணமாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிக்கையில் இன்று (19.06.2023) 13 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்ற தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் கன மழை மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்திட தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதுமட்டுமின்றி, பாதிப்பு ஏற்படக் கூடிய இடங்களில் ஜே.சி.பி. இயந்திரங்கள், மரம் அறுப்பான்கள் உள்ளிட்ட உபகரணங்களுடன் பல்துறை மண்டல குழுக்களையும், மீட்புக் குழுக்களையும், நிவாரண முகாம்களையும் தயார் நிலையில் வைத்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பேரிடர் தொடர்பான தகவல்களை துறை அலுவலர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில், மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையமும், மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களும் 24 மணி நேரமும் கூடுதலான அலுவலர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தை முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும், வாட்ஸ் அப் எண். 94458 69848 மூலமாகவும் தொடர்பு கொண்டு புகார்களை பதிவு செய்யலாம்.

முன்னதாக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் கடந்த 09.06.2023 அன்று அனைத்து துறை அலுவலர்கள், முப்படையினை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஒன்றிய அரசின் நிறுவனங்களின் அலுவலர்களுடன் தென்மேற்கு பருவமழை குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்து, மழைநீரை உடனடியாக அகற்றவும், மழைநீர் வடிகால்கள் மற்றும் நீர்நிலைகளை

தூர்வாரவும், பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் போக்குவரத்தை சீர்செய்யுமாறு அறிவுரை வழங்கினார்கள்.

தென்மேற்கு பருவமழை காலத்தில் ஏற்படும் கனமழை மற்றும் அதனைத் தொடர்ந்த வெள்ளம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் அரசு மற்றும் மாவட்ட நிருவாகம் மூலம் வழங்கப்படும் முன்னெச்சரிக்கை செய்திகளை கூர்ந்து கவனித்து செயல்படுமாறும், மாவட்ட நிருவாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in